**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**S.C. No:17 /2023**

**Dated: 10.02.2026**
**Deposition of Witnesses for PW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.சுரேஷ்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர். மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மூக்கம்பட்டி கிராமத்தில் என் பெற்றோர்களுடன் குடியிருந்து வருகிறேன். நான் சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்தேன். 2022 ஏப்ரல் 4 ம் தேதி நான் இந்தியா வந்தேன். எங்களுக்கும் எங்கள் சித்தப்பா வீட்டிற்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்து வந்தது. அதை சர்வேயர் வைத்து அளந்து எடுத்து கொள்ள சொன்னார்கள். அதன்பின்பு எங்கள் இரு குடும்பத்திற்கும் எந்த ஒரு பேச்சுவார்த்தையும் இல்லை. அதன்பின்பு 11.05.2022ம் தேதி மாலை சுமார் 7.45 மணிக்கு எங்கள் வீட்டிலிருந்து கடைவீதிக்கு போகும் வழியில் எங்கள் சின்னம்மா வீட்டு

வாசலில் நின்றுகொண்டு இருந்த சசிகலா மற்றும் லட்சுமி ஏதோ பேசி சிரித்து கொண்டு கேவலமான வார்த்தையில் பேசினார்கள். என்னை ஏன் முன்னை விட்டு பின்னே பேசுகிறீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கு பார்த்தசாரதி என்னை பார்த்து புண்ட மகனே நான் உன்னையாடா பேசினோம் என்று கேட்டான். சசிகலா என்னை பார்த்து தேவுடியா குச்சுக்காரி மகனே என்றும் பேசினார்கள். நானும் அவங்க கிட்ட வாய் சண்டை போட்டுக்கொண்டிருந்தோம். இந்த தகவல் தெரிய வந்து எனது தங்கைகள் இரண்டு பேரும் முன்னால் வர எனது அப்பா குமரேசன் அவருக்கு சொந்தமான TN 55 AU5582 clamar என்ற இரு சக்கர வாகனத்தில் பின்னார் வந்தார். அப்போது எதிரியின் வீட்டில் நின்ற என்னை எனது தங்கைகள் நீ வீட்டிற்கு வா சண்டை வேண்டாம் என்று இழுத்து கொண்ட போன போது செட்டியார் கடைக்கு முன்பு நிறுத்தி வைத்திருந்த எனது அப்பா அவருடைய வண்டியில் ஏறி உட்கார்ந்து இருந்த போது சசிகலா லட்சுமி பார்த்தசாரதி திருநாவுக்கரசு ஆகிய நாலு பேரும் சேர்ந்து கொண்டு தேவிடியா பயலே நீ என்னடா சண்டைக்கு ஏறி வாறிங்க என்றுசொல்லி எல்லோரும் சேர்ந்து கையால் அடித்து வண்டியோடு செட்டியார் கடை வாசலில் தள்ளிவிட்டார்கள். தள்ளிவிட்டதில் செட்டியார் கடை வாசலில் இருந்த பெரிய பட்டிய கல்லில் பின் தலையில் அடிபட்டு மயக்க நிலையில் இருந்தவரை லட்சுமி எனது அப்பாவின் மீது விழுந்து அவரது கழுத்தை நெறித்தார்கள். சசிகலா எனது அப்பாவின் தொண்டையில் மிதித்தார். எனது

அப்பா கீழே கிடந்தவரை திருநாவுக்கரசு பார்த்தசாரதியும் கையால் அடித்தும் கை கால் நெஞ்சில் மிதித்தார்கள். நாங்கள் அவர்களை விலக்கிவிட்டு நாங்கள் மூன்று பேரும் எனது அப்பாவை தண்ணீர் தெளித்து எங்கள் ஊரை சேர்ந்த சிவக்குமார் என்பவரது போக்கு வண்டியில் தூக்கிபோட்டு புதுக்கோட்டை மெடிக்கலில் சேர்த்தோம். எனது அப்பாவை பரிசோதித்த டாக்டர் எனது அப்பா ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். எங்களை அசிங்கமாக பேசி, எனது அப்பாவை கையால் அடித்தும்,கால்களால் மிதித்தும், தொடையை மிதித்தும் எங்களை அசிங்கமாக பேசியும் கொலை செய்த எதிரிகள் திருநாவுக்கரசு, பார்த்தசாரதி லட்சுமி சசிகலா ஆகியோர்களின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டதின் பேரில் போலீஸாரிடம் புகார் அளித்தேன். புகாரின் பேரில் போலீஸார் வழக்கு பதிவு செய்தார்கள். போலீஸார் விபரம் கேட்டார்கள் நடந்த விபரத்தை கூறினேன். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள். நான் கொடுத்த புகார்மனு என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனு அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.